**தெம்பான வருமானம் தரும் தென்னை, பாக்கு, மிளகு..**



பட்டுக்கோட்டை அருகிலிருக்கும் கிளாமங்கலம் கிராமத்திலிருக்கிறது ஆடிட்டர் அய்யாவு அவரின் பண்ணை. வருமானத்தை சரியாக கணக்குப் போட்டுப் பார்த்து, தென்னை, பாக்கு, மிளகு, ஜாதிக்காய், லவங்கம், சர்வ சுகந்தி, குடம்புளி.. என லாபம் கொடுக்கும் பயிர்களாகவே சாகுபடி செய்து வருகிறார் இந்த ஆடிட்டர். அதனால்தனர், சுற்றுப்புறத்தில் உள்ள விவசாயிகளுக்கெல்லாம் கூட பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது, அந்தப் பண்ணை.

40% செலவு... 60% லாபம் இருக்கணும்!

“தோட்டத்திலிருந்து கிடைக்கின்ற மொத்த வருமானத்தில் 40% மட்டும்தான், தோட்டத்திற்காக செலவாகணும். மீதியை லாபமா எடுக்கணும். அப்படி இல்லேனா.. எங்கேயோ தப்பு நடக்குதுன்னு அர்த்தம். அதைக் கண்டுபிடிச்சு, சரி பண்ணணும். அப்பதான் விவசாயத்தில் ஜெயிக்க முடியும்” என்று பேச்சைத் துவக்கினார், ‘ஆடிட்டர்’ அய்யாவு.

தென்னை, பாக்கு, மிளகு!

“மணலும் செம்மண்ணும் கலந்த பூமி. அதனால், முழுக்க தென்னையை நடவு செய்திட்டேன். இடையில பாக்கு இருக்கு. ஒவ்வொரு தென்னையிலும் நாலு மிளகுச் செடியை ஏத்தியிருக்கேன். இது போக லவங்கம், ஜாதிக்காய்.. மாதிரி எல்லாம் கலந்து 650 மரங்கள் இருக்கு. பாலுக்காக 15 எருமை மாடு, 10 பசு மாடு இருக்கிறது. தோட்டத்துக்குத் தேவையான மண்புழு உரத்தை நாங்களே தயாரித்துக் கொள்வோம். பண்ணையோட மேலாளர் கணேசன், முப்பத்தைந்து வருடமாக இங்க இருக்கிறார். அவர்தான் முழு பண்ணையையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

தெளிப்பு நீரில் கூடுதல் மகசூல்!

ஆரம்பித்தில் வாய்க்கால்லதான் தண்ணீர் விட்டோம். அதில் ஒன்றும் சொல்ற மாதிரி விளைச்சல் இல்லை. மரங்களுக்கு சரியா தண்ணீரும் கிடைக்கலை. அதனால் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தேன். அதில் உப்பு அடைச்சுக்கிட்டு அடிக்கடி தண்ணீர் வராமப் போயிடும். அதோட இந்த எலிங்க, நைட்டோட நைட்டா குழாயையெல்லாம் கடிச்சுப் போட்டுட்டு போயிடும். ஆனாலும், வாய்க்கால் பாசனத்தை விட சொட்டுநீர் முறையில் விளைச்சல் கொஞ்சம் கூடுதலாகத்தான் கிடைத்தது. அதுக்கப்புறம்தான் தெளிப்பு நீர்ப் பாசனம் பற்றிக் கேள்விப்பட்டு அதை அமைத்திருக்கிறேன்.

இந்த முறையில மரத்து மேலயும் தண்ணீர் படுவதால், மரத்தோட சூடு தணியுது. மண்ணில் சீரா தண்ணீர் படுவதால் ஈரப்பதம் அப்படியே இருக்குது. அதனால்தான் தோப்பு இவ்வளவு குளிர்ச்சியா இருக்கு. அதோட பலனும் கண்கூடாகத் தெரியுது. ஆரம்பத்தில் ஒரு மரத்தில் வருடத்திற்கு 100 காய்தான் கிடைத்துக் கொண்டிருந்தது. சொட்டுநீர் போட்டப் பிறகு 120 காய் வரைக்கும் கிடைத்தது. இப்போ 200 காய் வரைக்கும் கிடைக்கிறது" என்றவர் நுண் தெளிப்பு நீர்ப்பாசனம் பற்றி சொல்ல ஆரம்பித்தார்.

தினமும் 2 மணி நேரம் போதும்!

"15 அடி இடைவெளியில் கிளரிசீடியா மரத்தை நட்டு, அதில்தான் தெளிப்பு நீருக்கான குழாய்களைக் கட்டியிருக்கேன். இதுக்கான மெயின் பைப் மண்ணுக்கடியில் மூன்றடி ஆழத்தில் இருக்கும். மரத்தை ஏழடிக்கு மேல வளர விடக் கூடாது. குழாயோட உயரம் எட்டடி இருக்கணும். அதோட தலைப்பகுதியில் சுத்துற வடிவத்தில் ஊசி முனையளவு துளை இருக்கும். தண்ணீர் வேகமா பாயும் போது.. தலைப்பகுதி சுத்த ஆரம்பித்து, எல்லாப் பக்கமும் ஒரே மாதிரி தண்ணீர் தெளிக்கும். மரங்களில் பத்தடி உயரம் வரைக்கும் தண்ணீர் படும். தினமும் இரண்டு மணி நேரம் ஓட விட்டா போதும் .. நிலமே குளுகுளுனு இருக்கும். மண்ணும் எப்பவும் பொளபொளனு இருக்கும். இந்த நுண்தெளிப்புப் பாசன முறைக்கு ஏக்கருக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை செலவாகும்" என்றவர் சாகுபடி முறைகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

மூன்றடிக்கு மூன்றடி இடைவெளியில் குழி!

'நிலத்தில் மூன்று சால் உழவு ஓட்டி, 25 அடி இடைவெளியில் 3 கன அடி அளவில் குழி எடுக்க வேண்டும். ஏக்கருக்கு 70 குழிகள் வரும். பின் குழி எடுத்துள்ள வரிசைக்கு இடைவெளியில் தெளிப்பு நீர்க்குழாய்களை அமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழியிலும் நிலத்தின் மேல்மண், 10 கிலோ மட்கிய தொழுவுரம், 1 கிலோ வேப்பம் பிண்ணாக்கு.. ஆகியவற்றைக் கலந்து நிரப்பி தென்னங்கன்றுகளை நடவு செய்ய வேண்டும். பின் குழியை நன்றாக மூடிவிட வேண்டும். தினமும் இரண்டு மணி நேரம் தெளிப்பு நீர் மூலமாக தண்ணீர் கொடுக்க வேண்டும்.

செற்கை பாதி.. இயற்கை பாதி!

ஆறு மாதத்திற்கு ஒரு முறை தென்னைக்கு உரமிட வேண்டும். ஒரு முறை இயற்கை உரத்தையும் (ஒரு மரத்திற்கு 3 கிலோ மண்புழு உரத்தோடு, 30 கிலோ கோழி எரு அல்லது தொழுவுரம்), ஒரு முறை செயற்கை உரத்தையும் (ஒரு மரத்திற்கு ஒன்றரை கிலோ யூரியா, 4 கிலோ பொட்டாஷ், 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் போரான்) கொடுத்தால்.. மரங்கள் நன்கு வளரும். இயற்கை உரம் கொடுக்கும் போது.. ஒரு தடவை கோழி எரு, அடுத்தத் தடவை தொழுவுரம் என மாற்றி மாற்றிக் கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

7-ம் ஆண்டில் பாக்கு, மிளகு!

முதல் மூன்று ஆண்டுகளுக்கு கடலை, உளுந்து, எள்.. போன்றவற்றை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். அடுத்த மூன்றாண்டுகளுக்கு வாழையை சாகுபடி செய்யலாம். 7-ம் ஆண்டில் பாக்கு நடவுக்காக, இரண்டு வரிசை தென்னைகளுக்கு மையத்தில், எட்டடி இடைவெளியில் 3 கன அடி அளவில் குழிகள் எடுக்க வேண்டும். ஏக்கருக்கு 210 குழிகள் வரும். ஒவ்வொரு குழியிலும் நிலத்தின் மேல்மண், மூன்றரை கிலோ மட்கிய தொழுவுரம், 350 கிராம் வேப்பம்பிண்ணாக்கு.. ஆகியவற்றைக் கலந்து நிரப்பி, பாக்குக் கன்றுகளை நடவு செய்ய வேண்டும். அதன் பிறகு, தென்னையைச் சுற்றி நான்கு புறமும் மூன்று அடி இடைவெளியில், முக்கால் அடி ஆழத்திற்கு குழி எடுக்க வேண்டும். ஒவ்வொரு குழியிலும் ஒரு கிலோ மண்புழு உரத்தைப் போட்டு மிளகு நாற்றை நடவு செய்ய வேண்டும். (ஒவ்வொரு மரத்திற்க்கும் நான்கு மிளகுச் கொடிகள்).

தொடர்ந்து ஒவ்வொரு முறையும் தென்னைக்கு உரமிட வேண்டும். இந்த அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கான உரததை பாக்குக்கு தனியாக இட வேண்டும். ஒவ்வொரு மிளகுச் செடிக்கும் வருடத்திற்க்கு மூன்று முறை இரண்டு கிலோ அளவில் தொழுவுரம் இட வேண்டும். தென்னையில் நடவு செய்த 7-ம் ஆண்டிலிருந்து மகசூல் கிடைக்க ஆரம்பிக்கும். பாக்கு மற்றும் மிளகு ஆகியவை நடவு செய்ததில் இருந்து ஐந்து ஆண்டுகள் கழித்து பலன் கொடுக்கும்'

களையெடுப்பது வெட்டி வேலை!

சாகுபடி பாடத்தை முடித்துவிட்டு பேசிய அய்யாவு, "எல்லா விவசாயிகளும் தோப்பை சுத்தமா வைத்திருக்கணும்னு நினைக்கிறாங்க. அதுக்காக வருடா வருடம் உழுது விடறாங்க. இது தேவையே இல்லை. என் தோப்புலயெல்லாம் இருபது வருஷமா களை எடுக்கவேயில்லை. அதனால என்ன விளைச்சல் குறைந்து போச்ச? தோப்போட மேற்பகுதி சுத்தமா இருந்தா.. மழை பெய்யும் போது மேல் மண்ணை அடிச்சிட்டுப் போயிடும். மேல் மண்தான் நிலத்திற்கு சத்து இருக்கிற பகுதி. களைகள் இருந்தால், மண் அரிமானத்தை தடுத்துவிடும். களை எல்லாத்தையும்

நாம தென்னை நார்க் கழிவுகளைக் கூட போடலாம். நிலம் முழுக்க இப்படிப் போட்டுட்டா அதன் பிறகு களைகளே முளைக்காது.

மட்டைகள் மூலம் 11 டன் உரம்!

ஒரு தென்னை மரத்திலிருந்து வருடத்திற்கு 12 மட்டை கிடைக்கும். ஒரு மட்டை சராசரியாக 8 கிலோ எடை இருக்கும். அப்படிப் பார்த்தால் ஒரு மரத்திலிருந்து 96 கிலோ இயற்கை உரம் கிடைப்பதாக வைத்துக் கொள்ளலாம். ஒரு ஏக்கரிலிருந்து 70 மரத்திற்கு 6,720 கிலோ உரம் கிடைக்கிறது. இதே கணக்கில் பாக்க மூலமா 5.040 கிலோ (1 மட்டை 2 கிலோ, ஒரு மரத்திற்கு 12 மட்டை, மொத்தம் 210 மரம்) உரம் கிடைக்கிறது. இது போக.. மிளகு இலைகள், களைகள்னு ஏகப்பட்ட உரம் கிடைக்கிறது. இவ்வளவு இயற்கை உரம் கிடைப்பதால்தான் மண்ணும் பயிரும் இந்தளவுக்கு வளமா இருக்கிறது. என்றவர், மகசூல் மற்றும் வருமானம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

ஆண்டுக்கு 1 லட்சத்து 20 ஆயிரும் ரூபாய்!

“ஒரு தென்னை மரத்தில் வருடத்திற்கு 140 காய்களிலிருந்து 200 காய்கள் வரை கிடைக்கிறது. ஒரு காய் 5 ரூபாய் வரை விலை போகிறது. குறைந்தபட்சமாக 140 காய்கள்னு வைத்துக் கொண்டால் ஒரு ஏக்கருக்கு 9,800 காய்கள் மூலமா 49,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். கொப்பரையாக்கி வித்தா.. கூடுதலா கிடைக்கும். நான் கொப்பரையாத்தான் விற்பனை செய்கிறேன்.

ஒரு பாக்கு மரத்திலிருந்து வருடத்திற்கு குறைந்தபட்சம் 10 கிலோ பழம் கிடைக்கும். காய வைக்கிறப்போது 3 கிலோ பாக்கு கிடைக்கும் ஒரு ஏக்கர்ல இருக்கிற 210 மரங்கள் மூலமா 630 கிலோ கிடைக்கும். ஒரு கிலோ 70 ரூபாய் வீதம் விலைபோகிறதால், 44.100 ரூபாய் வருமானம் கிடைக்கும்.
வருடத்திற்கு ஒரு மிளகுக்கொடி மூலமாக குறைந்தபட்சம் 1 கிலோ மிளகுனு, ஒரு ஏக்கரில் இருக்கிற 280 மிளகுக் கொடி மூலமா, 280 கிலோ கிடைக்கும். கிலோ 250 ரூபாய்னு விலை போவதால், 70 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். மொத்தமா ஒரு ஏக்கர்ல மூணுக்கும் சேர்த்து 1,63,100 ரூபாய் கிடைக்கும். அதில் உரம், பராமரிப்பு, அறுவடை, போக்குவரத்துனு எல்லா செலவுகளும் போக, வருடத்திற்கு 1,20,000 ரூபாய் வரை லாபம் பார்க்க முடியும்” என்றார் சந்தோஷத்துடன்.

தொடர்புக்கு :

அய்யாவு, அலைபேசி : 94433 - 49993